05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ள தெய்வ வழிபாடுகளில் உயிர்ப்பாற்றல்
# ANIMISM IN DEITIES CULT IN MALAYSIAN TAMIL FOLK SONGS

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திலிப்குமார் அகிலன்
DHILIP KUMAR A/L AGILAN

SULTAN IDRIS EDUCATION UNIVERSITY
2023

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ள தெய்வ வழிபாடுகளில் உயிர்ப்பாற்றல்
# ANIMISM IN DEITIES CULT IN MALAYSIAN TAMIL FOLK SONGS

திலிப்குமார் அகிலன்
DHILIP KUMAR A/L AGILAN

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

DISSERTATION PRESENTED TO QUALIFY FOR A MASTERS IN ARTS
(RESEARCH MODE)

FACULTY OF LANGUAGES AND COMMUNICATION
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

2023

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



UPSI/IPS-3/BO 32
Pind: 00 m/s: 1/1

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
اونيۏرسيتي ڤنديديقن سلطان ادريس
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**Please Tick (√)**

| | |
|---|---|
| Paper Project | |
| Masters by Research | |
| Master by Mixed Mode | |
| PhD | |

**INSTITUTE OF GRADUATE STUDIES**

**DECLARATION OF ORIGINAL WORK**

This declaration is made on the ____ day of ______ 2023

**i. Student's Declaration:**

I, **DHILIP KUMAR A/L AGILAN, M20192001625, FACULTY OF LANGUAGES AND COMMUNICATION** hereby declare that the work entitled **ANIMISM IN DEITIES CULT IN MALAYSIAN TAMIL FOLK SONGS** is my original work. I have not copied from any other students" work or from any other sources except where due reference or acknowledgement is made explicitly in the text, nor has any part been written for me by another person.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

______________________
Signature of the student

**ii. Supervisor's Declaration:**

I, **DR. KINGSTON PAL THAMBURAJ** hereby certifies that the work entitled **ANIMISM IN DEITIES CULT IN MALAYSIAN TAMIL FOLK SONGS** was prepared by the above named student, and was submitted to the Institute of Graduate Studies as a* partial/full fulfillment for the conferment of **DEGREE OF MASTER OF ARTS (TAMIL LITERATURE)**, and the aforementioned work, to the best of my knowledge, is the said student"s work.

______________________ ______________________
Date Signature of the Supervisor

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**INSTITUT PENGAJIAN SISWAZAH / INSTITUTE OF GRADUATE STUDIES**

**BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/LAPORAN KERTAS PROJEK**
**DECLARATION OF THESIS/DISSERTATION/PROJECT PAPER FORM**

| | |
|---|---|
| Tajuk / *Title:* | **ANIMISM IN DEITIES CULT IN MALAYSIAN TAMIL FOLK SONGS** |
| No. Matrik / *Matric's No.:* | **M20192001625** |
| Saya / *I:* | **DHILIP KUMAR A/L AGILAN** |

Mengaku membenarkan Tesis/Desertasi/Laporan Kertas Projek (Doktor Falsafah/Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
*acknowledge that my [Thesis/Dissertation/Project-Paper] is kept at Universiti Pendidikan Sultan Idris(Tuanku Bainun Library) and reserves the right as follows:-*

1. Tesis/Disertasi/Laporan Kertas Projek adalah hak milik UPSI.
   *The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris.*
2. Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan sahaja.
   *Tuanku Bainun Library has the right to make copies for the purpose of research only.*
3. Perpustakan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antaraInstitusi Pengajian Tinggi.
   *The Library has the right to make copies of the thesis for academic exchange.*
4. Perpustakaan tidak dibenarkan membuat penjualan sainan Tesis/Disertasi ini bagi kategori **TIDAK TERHAD.**
   *The library are not allowed to make any profit for 'Open Access' Thesis/Dissestation.*
5. Sila tandakan ( / ) bagi pilihan kategori di bawah / *Please tick* ( / ) *for category below*:-

| | | |
|---|---|---|
| ☐ | **SULIT/*CONFIDENTIAL*** | Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972. / *Contains confidential information under the Official Secret Act 1972* |
| ☐ | **TERHAD/*RESTRICTED*** | Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh organisasi/ badan di mana penyelidikan ini dijalankan. / *Contains restricted information as specified by the organization where research was done.* |
| ☐ | **TIDAK TERHAD / *OPEN ACCESS*** | |

(Tandatangan Pelajar / Signature)

(Tandatangan Penyelia / Signature of Supervisor)
& (Nama & Cop Rasmi / Name & Official Stamp)

Tarikh: ______________________

Catatan: Jika Tesis/Disertesi ini **SULIT** @ **TERHAD**, sila lampirkan surat daripada pihak berkuasa/organisasi berkenaan dengan menyatakan sekali sebab dan tempoh laporan ini perlu dikelaskan sebagai **SULIT** dan **TERHAD.**

*Notes: If the thesis is CONFIDENTIAL or RESTRICTED, please attach with the letter from the organization with period and reasons for confidentially or restriction.*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# அணிந்துரை

இந்த ஆய்வு சிறப்பாக நிறைவுறுவதற்கு உதவிய எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிகள் உரித்தாகட்டும். அடுத்ததாக, ஆய்வினைச் செம்மையாக செய்து முடிக்க பக்க பலமாக விளங்கிய ஆய்வின் மேற்பார்வையாளர் முனைவர் கிங்ஸ்டன் பால் தம்புராஜ் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை நவில்கிறேன். ஆய்விற்கு தொடர்பான ஐயங்களுக்குத் தெளிவான விளக்கங்களை வழங்கிய சுல்தான் இட்ரீஸ் கல்வியியல் பல்கலைக்கழகத்தாருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக, எனக்கு உறுதுணையாக விளங்கிய தாய் தந்தையருக்கும் நண்பர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## ஆய்வுச்சுருக்கம்

இந்த ஆய்வு மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களில் உள்ள தெய்வங்களை ஆவணப்படுத்துவதையும் அத்தெய்வ வழிபாடுகளில் காணப்படும் உயிர்ப்பாற்றலைக் கண்டறிந்து வகைப்படுத்துவதையும் மற்றும் அந்தத் தெய்வ வழிபாடுகளிலுள்ள உயிர்ப்பாற்றல் தமிழர்களிடையே ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை மதிப்பீடு செய்வதையும் முதன்மை நோக்கங்களாக கொண்டுள்ளது. பண்புசார் அணுகுமுறைகளான விளக்கவியலும் பகுப்பாய்வியலும் இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் நோக்கங்களுக்குத் தொடர்புடைய 117 மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்கள் இவ்வாய்வில் ஆராயப்பட்டுள்ளன. நாட்டுப்புறப்பாடல்களிலிருந்து தரவுகளைப் பெற உயிர்ப்பாற்றல் கோட்பாடும் கருப்பொருள் பகுப்பாய்வும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் தரவுகள் சூழல் பகுப்பாய்வையும் தொடர் பகுப்பாய்வையும் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. சூழல் பகுப்பாய்வு நாட்டுப்புறப்பாடல்களின் உள்ளடக்கத்தை ஆராயவும் தொடர் பகுப்பாய்வு தெய்வங்களையும் உயிர்ப்பாற்றலையும் குறிப்பிடும் சொற்களையும் தொடர்களையும் ஆராய பயன்படுத்தப்பட்டன.ஆய்வுக்கருவியாகக் குறியீட்டுக் கையேடு பயன்படுத்தப்பட்டது. ஆய்வின் முடிவில் ஆண் பெருந்தெய்வம், பெண் பெருந்தெய்வம், ஆண் சிறுதெய்வம், பெண் சிறுதெய்வம், தேவர்கள், இயற்கை, விழாக்கள், இடங்கள் என எட்டு வகைகளில் தெய்வங்கள் கண்டறியப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. தெய்வ வழிபாடுகளில் காணப்பட்ட நான்கு உயிர்ப்பாற்றல் கூறுகள் தரவுகளின் ஒப்புமைக் கருதி இணைக்கப்பட்டும் விளக்கப்பட்டுள்ளன. தெய்வ வழிபாடுகளில் உள்ள உயிர்ப்பாற்றல் அகநிலை, புறநிலை மற்றும் பண்பாட்டு நிலையில் தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களும் கண்டறியப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. ஆங்கிலேயக் காலனித்துவக் காலக்கட்டத்தில் மலேசியாவிற்கு கொண்டு வரப்பட்ட தமிழர்களால் வழிபடப்பட்டத் தெய்வங்களை முழுமையாகக் கண்டறிந்து விளக்கியுள்ள இந்த ஆய்வு அவர்களின் தெய்வ நம்பிக்கையை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**ANIMISM IN DEITIES CULT IN MALAYSIAN TAMIL FOLK SONGS**

## ABSTRACT

This study was aimed to discover the deities in Malaysian Tamil folk songs, to analyse the animism in deities cult and to evaluate the impacts of animism among Tamils Labourers. Qualitative approaches with descriptive and explanatory designs were used in this study. A total of 117 Malaysian Tamil folk songs that met the research objectives were analysed. Animism theory and thematic analysis were used to collect information from the folk songs. Data were analysed using narrative and discourse analysis. Narrative analysis describes the content of the folk songs while discourse analysis explains the usage of terms and words used in the folk songs that can be related to the deities and animism. Code manual were used as research instrument. The findings showed that eight types of deities such as Main male deities, Main female deities, Tutelary male deities, Tutelary female deities, Devas, Nature Deities, Festivals and Places were worshipped by the Tamil labourers. Four elements of animism which founded in deities cult were consodilated according similarities. This study also showed the psychological, physical and cultural impacts by animism in deities cult among Tamil labourers. The study fully exposed the deity beliefs among Tamil Labourers.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**ANIMISME DALAM PEMUJAAN DEWA-DEWI DALAM LAGU RAKYAT TAMIL MALAYSIA**

ABSTRAK

Kajian ini bertujuan untuk mengenalpasti dewa-dewi dalam lagu rakyat Malaysia, menganalisis animism yang terkandung dalam pemujaan dewa-dewi dan menilai kesan-kesan animisme dalam kalangan buruh Tamil. Pendekatan kualitatif bersama reka bentuk deskriptif dan penjelasan telah diaplikasikan dalam kajian ini. Lagu rakyat Tamil sebanyak 117 yang menemui objektif kajian telah dianalisis. Teori animisme dan analisis tematik telah digunakan untuk mengumpul maklumat daripada lagu rakyat. Data telah dianalisis dengan menggunakan kaedah analisis naratif dan wacana. Analisis naratif telah menghuraikan kandungan lagu rakyat manakala analisis wacana telah menjelaskan penggunaan terma dan perkataan yang digunakan dalam lagu rakyat yang berhubungkait dengan dewa-dewi dan animisme. Kod manual telah digunakan sebagai instrumen kajian. Dapatan kajian telah menunjukkan bahawa lapan jenis dewa-dewi telah disembah oleh buruh Tamil iaitu Dewa utama, Dewi utama, Dewa sampingan, Dewi sampingan, Dewa, Dewa-dewi alam, Perayaan dan Tempat. Empat elemen animisme yang didapati telah disatukan berpandukan persamaan. Kajian ini juga telah menunjukkan impak dari segi psikologi, fizikal dan budaya oleh animisme dalam pemujaan dewa-dewi oleh buruh Tamil. Kajian ini telah mendedahkan kepercayaan buruh Tamil secara menyeluruh.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# உள்ளடக்கம்


பக்கம்

**DECLARATION OF ORIGINAL WORK** ii

**DECLARATION OF THESIS/ DISSERTATION/ PROJECT PAPER FORM** iii

**அணிந்துரை** iv

**ஆய்வுச்சுருக்கம்** V

**ABSTRACT** Vi

**ABSTRAK** Vii

**உள்ளடக்கம்** Viii

**அட்டவணை பட்டியல்** Xv

**வரிபடப் பட்டியல்** Xvi

**இயல் அறிமுகம் 1**

1.1 முன்னுரை 1

1.2 ஆய்வு பின்னணி 3

1.3 ஆய்வுச்சிக்கல் 4

1.4 ஆய்வு நோக்கம் 5

1.5 ஆய்வு வினா 5

1.6 ஆய்வின் முக்கியத்துவம் 6

1.7 ஆய்வு எல்லை 7

1.8 ஆய்வு சான்றாதாரங்கள் 8

1.8.1 முதன்மை சான்றாதாரங்கள் 8


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1.8.2 துணைமை சான்றாதாரங்கள் 8

1.9 கலைச்சொல் விளக்கம் 9

1.9.1 தெய்வம் 9

1.9.2 தமிழ்த் தொழிலாளர்கள் 10

1.9.3 நாட்டுப்புறப்பாடல் 10

1.9.4 வழிபாடு 11

1.10 தொகுப்புரை 11

**இயல் முன்னாய்வு மீள்நோக்கு 2**

2.1 முன்னுரை 12

2.2 தெய்வங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வேடுகள் 13

2.3 நாட்டுப்புறப்பாடல்கள் தொடர்புடைய ஆய்வேடுகள் 30

2.4 உயிர்ப்பாற்றல் தொடர்புடைய நூல்கள் 37

2.5 தொகுப்புரை 49

**இயல் ஆய்வு நெறிமுறை 3**

3.1 முன்னுரை 50

3.2 ஆய்வு வடிவமைப்பு 51

3.3 ஆய்வு முறை 55

3.3.1 ஆய்வுக்கருவி 56

3.4 தரவு சேகரிக்கும் முறை 56

3.5 தரவு பகுப்பாய்வு முறை 57

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


3.5.1 கருப்பொருள் பகுப்பாய்வு 58

3.5.1.1 குறியீட்டுக் கையேட்டைத் தயார் செய்தல் 58

3.5.1.2 குறியீடுகளைச் சரிபார்த்தல் 58

3.5.1.3 கருப்பொருள்களைக் கண்டறிதல் 59

3.5.1.4 தகவல்களை உறுதிப்படுத்துதல் 59

3.4.2 சூழல் பகுப்பாய்வு 59

3.4.3 தொடர் பகுப்பாய்வு 60

3.6 ஆய்வுக் கோட்பாடு 61

3.7 ஆய்வுக் கோட்பாட்டுக் கட்டமைப்பு 70

3.8 தொகுப்புரை 71

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**இயல் 4 ஆய்வின் முடிவுகளும் கண்டுபிடிப்புகளும்**

4.1 முன்னுரை 70

4.2 மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ள தெய்வங்களைக் கண்டறிந்து ஆவணப்படுத்துதல் 73

4.2.1 ஆண் பெருந்தெய்வம் 73

4.2.1.1 விஷ்ணு 74

4.2.1.2 சிவபெருமான் 93

4.2.1.3 முருகக்கடவுள் 105

4.2.1.4 விநாயகப் பெருமான் 124

4.2.1.5 பிரம்மன் 130

4.2.1.6 அய்யப்பன் 132

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.2.2 பெண் பெருந்தெய்வம் 133

4.2.2.1 மீனாட்சி 134

4.2.2.2 வள்ளி 138

4.2.2.3 தெய்வானை 141

4.2.2.4 சீதை 142

4.2.2.5 ஆதிபராசக்தி ஆதிசக்தி / 146

4.2.2.6 காமாட்சி 147

4.2.2.7 ஈஸ்வரி 149

4.2.2.8 பார்வதி 150

4.2.2.9 உமையவள் 151

4.2.3 ஆண் சிறுதெய்வம் 152

4.2.3.1 முனியாண்டி 152

4.2.3.2 அய்யனார் 154

4.2.4 பெண் சிறுதெய்வம் 155

4.2.4.1 காளியம்மன் 156

4.2.4.2 மாரியம்மன் 161

4.2.4.3 காவேரி அம்மன் 168

4.2.4.4 பூவாடைக்காரி 169

4.2.4.5 முத்தாரம்மன் முத்தாலம்மன் / 169

4.2.4.6 கன்னிமார் 170

4.2.4.7 பிடாரி அம்மன் 172

4.2.5 தேவர்கள் 173

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



4.2.5.1 எமன் 173

4.2.5.2 இந்திரன் 179

4.2.6 இயற்கை 183

4.2.7 விழாக்கள் 191

4.2.8 இடங்கள் 193

4.3 மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ள தெய்வ வழிபாடுகளில் காணப்படும் உயிர்ப்பாற்றல் கூறுகளைக் கண்டறிந்து வகைப்படுத்துதல் 196

4.3.1 ஆன்ம இருப்பு நம்பிக்கையும் அவை அதீத ஆற்றல் மற்றும் புனிதத்தன்மை காரணமாகத் தெய்வமாகுதலும் 197

4.3.1.1 மனித ஆன்மா 197

4.3.1.2 சத்தியம் செய்தல் 203

4.3.1.3 இயற்கை பொருட்கள் 205

4.3.1.4 பெண் தெய்வங்கள் 221

4.3.1.5 திருப்பாற்கடல் 223

4.3.1.6 திருமால் படித்துறை 224

4.3.1.7 உயிரற்றப் பொருட்கள் 225

4.3.1.8 வேல் 230

4.3.2 ஆன்மா குறித்த நம்பிக்கைத் தோற்றம் 231

4.3.2.1 கனவு 232

4.3.2.2 மரணம் 234

4.3.2.3 நோய் 235

4.4 மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ளத் தெய்வ வழிபாடுகளிலுள்ள உயிர்ப்பாற்றல் தமிழர்கள் மத்தியில் 237


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை மதிப்பீடு செய்தல்

4.4.1 அகநிலை தாக்கங்கள் 237

4.4.1.1 மனிதர்களைத் தெய்வமாக்குதல் 237

4.4.1.2 தெய்வங்களை மனிதர்களாக்குதல் 250

4.4.1.3 அறிவு 251

4.4.1.4 நம்பிக்கை 259

4.4.2 புறநிலை தாக்கங்கள் 276

4.4.2.1 போற்றுதல் 276

4.4.2.2 இடங்களுக்குத் தெய்வப் பெயர்கள் 277

4.4.2.3 பல்வேறு வழிபாடுகள் 278

4.4.3 பண்பாட்டு நிலை தாக்கங்கள் 282

4.4.3.1 திருவிழாக்கள் 283

4.4.3.2 கோலம் 284

4.4.3.3 நடனங்கள் 285

4.4.3.4 தண்டனைகள் 286

4.5 தொகுப்புரை 287

**இயல் தொகுப்பும் பரிந்துரைகளும் ஆய்வு 5**

5.1 முன்னுரை 289

5.2 சுருக்கம் 289

5.3 ஆய்வின் முடிவுகள் 290

5.4 ஆய்வின் முக்கியத்துவம் 299

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


5.5 ஆய்வின் பயன் 299

5.6 தொடர் ஆய்வுகளுக்கான பரிந்துரை 299

**மேற்கோள்** 301

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## அட்டவணை பட்டியல்

**அட்டவணை எண்** **பக்கம்**

1.1 ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்கள் 8

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# வரிபடப் பட்டியல்


| வரிபட எண் | | பக்கம் |
|---|---|---|
| 3.1 | ஆய்வு கட்டமைப்பு | 55 |
| 3.2 | சீரியல் பாய்வு குறியீட்டுக் கையேடு *(A streamlined codes-to-theory model for qualitative inquiry)* | 56 |
| 3.3 | Words and meanings. Signal-thought-desingata relations. (a) The-thought-word-thing-triangle. After Ogden and Richards. Meaning of Meaning; (b) "Meaning of words". A functional flow diagram. (As Cited in Jones, 2010, Embodiment, 4). | 60 |
| 3.4 | உயிர்ப்பாற்றல் அட்டவணை | 64 |
| 3.5 | ஆய்வுக் கோட்பாட்டுக் கட்டமைப்பு | 70 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

# அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.1 முன்னுரை

மலேசியாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே உள்ளத் தொடர்பினை ஐரோப்பியர் வருகைக்கு முன்பு மற்றும் ஐரோப்பியர் வருகைக்குப் பின்பு என்று இரண்டாகப் பிரிக்கும் சபாபதி (2015), இரண்டாம் காலத்தை முக்கியமானதாகக் குறிப்பிடுகிறார். இக்காலக்கட்டத்தில், குறிப்பாக 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அதிகமானத் தென்னிந்தியர்கள் ஒப்பந்தக் கூலிகளாக மலேசியாவிற்கு கொண்டு வரப்பட்டனர். இவர்களுள் 80% இந்துக்களாவர் (இந்துஜா & பரமேஸ்வரி, 2020). இவர்களுக்காக ஆங்கிலேயர்கள் ஆலயங்களையும் தமிழ்ப்பள்ளிகளையும் கட்டித் தந்தனர் (பரமேஸ்வரி, 2019). ஆனால், தமிழர்கள் தங்களின் தனிப்பட்ட தெய்வங்களை வழிபடவும் சுயமாகக் கோயில்களைக் கட்டிக் கொண்டனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இத்தெய்வங்கள் அவர்கள் வாழ்ந்த ஊர்களிலோ அல்லது அவர்களின் சமுதாயத்தினாலோ வணங்கப்பட்ட குல தெய்வம் அல்லது இஷ்ட தெய்வங்களாகும். அவை காளியம்மன், மாரியம்மன், திரெளபதி, இடும்பன், அங்காளம்மன், பைரவர், கருப்பண்ணச்சாமி, முனீஸ்வரர் போன்ற தெய்வங்களாக இருந்துள்ளன (இந்துஜா & பரமேஸ்வரி, 2020). இவற்றை பிடிமண், வேல், திரிசூலம் போன்ற வடிவங்களில் கொண்டு வந்துள்ளனர் (மணிமாறன், சிவபாலன் & இராசேந்திரன், 2016). மேலும், சாலை மற்றும் இரயில் தண்டவாளம் அமைக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்தோரும், தோட்டப்புறங்களில் வாழ்ந்த மக்களும் தங்களின் சமயத் தேவைக்காகவும் மற்றும் அவரவரின் வசதிக்குத் தகுந்தபடி காவல் தெய்வக் கோயில்களை உருவாக்கி வழிபட்டுள்ளனர் (பரமேஸ்வரி, 2020). அதோடு, முருகன், பிள்ளையார், சிவன், திருமால் போன்ற முதன்மை தெய்வங்களும் வழிபடப்பட்டுள்ளன. அவற்றிற்காகவும் ஆலயங்களையும் எழுப்பியுள்ளனர் (மணிமாறன், 2014). இவையே மலேசியாவின் தொடக்கக்கால இந்து தெய்வ ஆலயங்கள் உருவாகுவதற்கு மூலங்களாக அமைந்தன. தமிழர்கள் மலேசியாவில் தெய்வங்களுக்கு ஆலயங்களை நிறுவி வழிபட்டுள்ளது தெய்வங்களோடு ஒரு தொடர்ச்சியான உறவை ஏற்படுத்திக் கொள்ள ஆகும் (மணிமாறன், சிவபாலன் & இராசேந்திரன், 2016). அத்தெய்வங்கள் பற்றியத் தகவல்களை தமிழர்கள் தங்களுடைய வாய்மொழி இலக்கியமான நாட்டுப்புறப்பாடல்களில் பதிவுச் செய்துள்ளனர். மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்கள் மலேசியத் தமிழர்களின் நேரடி வாய்மொழி இலக்கியமாகும். இப்பாடல்கள் அவர்களின் வாழ்வை முழுமையாக சித்தரிக்கின்றன (லோகேஸ்வரி, 2017). நாட்டுப்புறப்பாடல்களைக் கென்னி (1991) உண்மையானது மற்றும் அசலானது என்கிறார். இதை மனதிலிருந்து உணர வேண்டும் எனவும் கூறுகிறார். இது நாட்டுப்புறப்பாடல்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மனித உணர்வுகளைக் கடத்துவதோடு மட்டுமல்லாமல் மக்களின் வாழ்க்கை ஓட்டத்தினையும் பதிவுச் செய்துள்ளதால் ஆகும். எனவே, அவை வரலாற்றுக் குறிப்புகளாகவும் விளங்குகின்றன. எனவே, தமிழர்களின் தெய்வங்களையும், அது சார்ந்த நம்பிக்கைகளையும், தெய்வ வழிபாட்டிலுள்ள நம்பிக்கைகளினால் அவர்கள் மத்தியில் விளைந்த தாக்கங்களையும் அவர்களுடைய நேரடி வாய்மொழி இலக்கியமான தமிழ் நாட்டுப்புறப்பாடல்களின்வழி ஆராய்வது ஏற்புடையதாகும். இந்த ஆய்வு இத்தகவல்களைத் தெளிவுபட விளக்கியுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.2 ஆய்வுப் பின்னணி

மானிடவியல் துறை நாட்டார் நம்பிக்கைகளை முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கூறுகின்றது. நம்பிக்கைகள் எனப்படுவது தெய்வ நம்பிக்கைகளோடு ஏனைய பிற நம்பிக்கைகளையும் உள்ளடக்கியதாகும். எனவே, தமிழர்களின் தெய்வங்களையும் அவை சார்ந்த ஏனைய நம்பிக்கைகளையும் ஆராய்வது முக்கியமாகும். இதற்கு தமிழர்களின் இலக்கியமான நாட்டுப்புறப்பாடல்கள் வழிசெய்துள்ளன. குறிப்பாக, அவர்களின் தெய்வ நம்பிக்கைகளை ஆராய்ந்து தெளிவுப்பெற அப்பாடல்கள் ஒரு சிறந்த ஊடகமாகச் செயல்பட்டுள்ளன. மேலும், தமிழர்கள் பலவகையான துன்பங்களை அனுபவித்தப் போதும் தெய்வங்களை மறக்கவில்லை. அவர்கள் பல்வேறு தெய்வங்களை வழிபடுபவர்களாகவும், அந்தத் தெய்வங்களின் மீது ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டவர்களாகவும், தெய்வங்களைத் தங்களின் நடப்பு வாழ்க்கைச்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சூழல்களோடு பொருத்திக் கொள்பவர்களாகவும் தெய்வங்களுக்காக பல்வேறு விழாக்களைக் கொண்டாடுபவர்களாகவும் காணப்படுகின்றனர். அதோடு, மனித உருவம் கொண்ட தெய்வங்களைக் கடந்து இயற்கைப் பொருட்களையும் தெய்வமாக வணங்கும் பழக்கம் தமிழர்களிடையே இருந்துள்ளது. இது உயிர்ப்பாற்றல் நம்பிக்கையாகும். மிகப் பழமையான இந்த நம்பிக்கையைத் தமிழர்கள் தெய்வ வழிபாடுகளில் தொடர்ந்தாற்போல் இணைத்துக் கொண்டு வந்துள்ளனர். அவ்வாறு நீண்ட காலத்திற்கு இணைத்துக் கொண்டதினால், அவர்கள் மத்தியில் அகம், புறம், பண்பாடு சார்ந்த நிலைகளில் பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே, தமிழர்களின் வாழ்வில் முக்கிய இடத்தினை வகிக்கும் தெய்வங்களையும், அத்தெய்வங்களின் வழிபாட்டோடு ஒன்றிணைந்து வரும் உயிர்ப்பாற்றலையும் அவர்கள் மத்தியில் அவ்வுயிர்ப்பாற்றலின் தாக்கங்களையும் ஆராய்வது அவசியமானதாகும். இது தமிழர்களின் சமய அறிவினையும், தெய்வ வழிபாட்டில் அவர்களுக்கிருக்கும் புரிதலையும் அறிந்து கொள்ள வழிச் செய்யும். மேலும், உலகின் பழமையான நம்பிக்கையான உயிர்ப்பாற்றலானது தமிழர்களின் தெய்வ வழிபாடுகளின் வாயிலாக அவர்கள் வாழ்வில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் தெளிவுற புரிந்து கொள்ள முடியும். “மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்கள்” நூலின் முகவுரையில் முரசு நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டுள்ளது போல, தமிழர்களின் வாய்மொழியாகப் பிறந்த தமிழ் நாட்டுப்புறப்பாடல்கள் அவர்களின் உண்மை வாழ்க்கையைப் பிரதிபலிப்பதால், அதனைப் பயன்படுத்தி அவர்களின் தெய்வ நம்பிக்கைகளை ஆராய்வது ஏற்புடையதாக இருக்கும் என்ற காரணத்தினால் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.3 ஆய்வுச் சிக்கல்

தற்போதைய நடப்புக் காலத்தில் மலேசியத் தமிழர்கள் பல்வேறு தெய்வங்களை வழிபடுகின்றனர் (சற்குணவதி & குணசேகரன், 2020). ஆனால், மலேசியாவிற்குப் புலம்பெயர்ந்த போது அவர்களின் வழிபாட்டில் இருந்த தெய்வங்கள் பற்றிய தகவல்கள் இல்லை. இது அவர்களின் தொடக்கக்காலச் சமயப் பின்புலத்தினை அறிந்து கொள்ள வழிச்செய்யவில்லை. தொடர்ந்து, தமிழர்களின் தெய்வ வழிபாட்டில் உயிர்ப்பாற்றல் நம்பிக்கை சங்கக்காலம் முதற்கொண்டு இருந்து வந்துள்ளதைச் சீனிராஜ் & பரந்தாமன் (2020) ஆகியோர் குறிப்பிடுகின்றனர். ஆன்மாவை அடியொற்றிய மறுபிறப்பு நம்பிக்கை, நடுகல் மற்றும் சதிகல் வழிபாடு, மர வழிபாடு மற்றும் இயற்கை வழிபாடு போன்றவைத் தமிழர்களிடையே உயிர்ப்பாற்றல் நம்பிக்கையானது பழங்காலத்தொட்டு இருந்து வருவதை உறுதிச்செய்கின்றன. அதனை அடியொற்றி மலாயாவிற்குப் புலம்பெயர்ந்தத் தமிழர்களும் இங்கே தெய்வங்களை வழிபடும் பொழுது உயிர்ப்பாற்றல் நம்பிக்கையை வழிபாடுகளில் தொடர்ந்தாற்போல் இணைத்துக் கொண்டுள்ளனர். ஆனால், அந்நம்பிக்கைக் குறித்து அவர்கள் முழுமையாக அறிந்திருக்கவில்லை. இதற்கு உயிர்ப்பாற்றல் நம்பிக்கையைக் தாங்கள் பின்பற்றும் இந்து மதத்தின் சாரமாக தமிழர்கள் கடைப்பிடித்ததே காரணமாகும் (*Kuen & Ling, 2019*(. இக்கூற்றை,

> “தோட்டப்புறக் கோயில்களிலும் இல்லங்களிலும் சமயத் தெளிவற்ற கிராம தெய்வ வழிபாட்டு முறையே பின்பற்றப்பட்டு வந்தது”,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


என்ற முரசு நெடுமாறன் (1997) அவர்களின் கருத்தைக் கொண்டும் உறுதி செய்துக் கொள்ள முடிகிறது. ஆகவே, தமிழர்களின் வழிபாட்டில் உயிர்ப்பாற்றல் நம்பிக்கை இருந்த போதிலும் அதைக் குறித்து அவர்கள் ஆழ்ந்து அறிந்திருக்கவில்லை. எனவே, தெய்வ வழிபாடுகளிலுள்ள உயிர்ப்பாற்றலினால் தமிழர்கள் மத்தியில் விளைந்த தாக்கங்களையும் அவர்கள் உணர்ந்திருக்கவில்லை. எனவே, இவ்விரண்டு சிக்கல்களைக் களைய இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 1.4 ஆய்வு நோக்கம்

i) மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ள தெய்வங்களைக் கண்டறிந்து ஆவணப்படுத்துதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ii) மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ள தெய்வ வழிபாடுகளில் காணப்படும் உயிர்ப்பாற்றல் கூறுகளைக் கண்டறிந்து வகைப்படுத்துதல்.

iii) மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ளத் தெய்வ வழிபாடுகளிலுள்ள உயிர்ப்பாற்றல் தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளத் தாக்கங்களை மதிப்பீடு செய்தல்.

## 1.5 ஆய்வு வினா

i) மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களில் காணப்படும் தெய்வங்கள் யாவை ?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ii) மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ள தெய்வ வழிபாடுகளில் என்ன மாதிரியான உயிர்ப்பாற்றல் கூறுகள் காணப்படுகின்றன ?

iii) மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ளத் தெய்வ வழிபாடுகளிலுள்ள உயிர்ப்பாற்றல் தமிழர்கள் மத்தியில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன?

## 1.6 ஆய்வின் முக்கியத்துவம்

ஆய்வாளரால் மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களில் காட்டப்பட்டுள்ள தெய்வங்கள் குறித்துச் சுய புரிதலை ஏற்படுத்திக் கொண்டு அவற்றை விளக்க இயலும் என்பதால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மலேசியத் தமிழ் நாட்டுப்புற பாடல்களில் காணலாகும் தெய்வங்களை இவ்வாய்வு பட்டியலிட்டுக் காட்டுகிறது. இது ஆங்கிலேயர் ஆட்சிக் காலக்கட்டத்தில் மலேசியாவிற்குக் கொண்டு வரப்பட்ட பல்வேறு பின்னணியிலான தமிழர்களின் வழிபாட்டில் தொடர்ச்சியான இடத்தைப் பெற்றிருந்த தெய்வங்கள் குறித்த வரலாற்றுப் பதிவாக இவ்வாய்வை அமைத்துக் கொள்ள உதவுகிறது. மேலும், முந்தைய ஆய்வுகள் அடிப்படையில் நோக்கும் பொழுது, மலேசியாவில் நாட்டுப்புறப் பாடல்களிலுள்ள தெய்வங்களை அடியொற்றிய ஆய்வுகள் குறைவு என்பதால் இந்த ஆய்வு பிற ஆய்வுகளுக்கு ஒரு மைல் கல்லாக அமைகிறது. இதன்மூலம், எதிர்காலத்தில் இந்தப் பொருண்மையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதற்கு தூண்டுகோலாகவும் இந்த ஆய்வு அமையும். உயிர்ப்பாற்றல் எனும் துறையின்கீழ் தமிழர்களின் தெய்வங்கள் இன்னும் ஆழ்ந்து பார்க்கப்படாத நிலையில் இவ்வாய்வு அது போன்ற பொருண்மை கொண்ட ஏனைய ஆய்வுகளுக்கு ஒரு தொடக்கப்புள்ளியாக அமைகிறது. அதுமட்டுமல்லாது,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மலேசியாவில் தமிழர்களின் மத்தியில் நிலவும் உயிர்ப்பாற்றல் குறித்த நம்பிக்கைகளைப் பரவலான நோக்கில் ஆராய்வதற்கும் இந்த ஆய்வு ஒரு தொடக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. மேலும், உயிர்ப்பாற்றல் மலேசியாவில் மலாய், ஆங்கிலம் போன்ற வேறு மொழிகளில் அதிகமாக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. அதனால், இவ்வாய்வு உயிர்ப்பாற்றல் குறித்த ஆய்வுகள் தமிழில் தொடர்ந்து நடைபெற களம் அமைத்துக் கொடுக்கின்றது. அதோடு, தெய்வ வழிபாடுகளிலுள்ள உயிர்ப்பாற்றல் மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ளத் தமிழ்மக்களின் மத்தியில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதையும் இந்த ஆய்வு எடுத்துரைக்கிறது. இதனால், தெய்வ வழிபாடுகளில் இயைந்துள்ள உயிர்ப்பாற்றல் தமிழர்களின் மத்தியில் அகம், புறம், பண்பாடு சார்ந்து ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை அறிந்து கொண்டு தெளிவுபெற முடியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.7 ஆய்வு எல்லை

இந்த ஆய்வு முதன்மையாக மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களை ஆராய்ந்துள்ளது. மலேசியா மற்றும் அதனோடு தொடர்புடைய தகவல்களின் சாரங்களை இந்தப் பாடல்கள் குறிப்பிடுவதால் இவை மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்கள் என்று அழைக்கப்படுகின்றன (விடுதலைக்கு முன்பு மலாயா என்று அறியப்பட்டது). ஒட்டுமொத்தமாக 531 மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அதிலிருந்து ஆய்வின் நோக்கங்களைப் பூர்த்திச் செய்வதற்காக தெய்வக் குறிப்புகளை உடைய 117 பாடல்கள் மட்டுமே ஆராயப்பட்டுள்ளன. மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தமிழர்கள் புலம்பெயரத் தொடங்கியக் காலக்கட்டம் (1887) தொடங்கி 1940 வரையில் ஏற்பட்ட முக்கியச் சம்பவங்களைப் பதிவுச்செய்துள்ளது. இக்காலக்கட்டம் மலாயாவில் ஆங்கிலேயர்களின் காலனித்துவம் நிலைப்பெற்றிருந்த காலமாகும். இக்காலக்கட்டத்தில்தான் தமிழர்கள் மலாயாவில் தங்களின் தெய்வங்களை வழிபடத் தொடங்கினர். மேலும், தங்களுடையப் பூர்வீக மண்ணில் தெய்வங்கள் வழிபடப்பட்ட முறைகளையும் பாடல்களின் வாயிலாக வெளிக்காட்ட முயன்றனர். எனவே, தமிழர்கள் வணங்கியத் தெய்வங்களையும் அவை சார்ந்த தகவல்களையும் ஆராயும் ஆய்வின் நோக்கங்களை விளக்குவதாய் அமைந்த நாட்டுப்புறப்பாடல்களிலுள்ள வரிகள் மட்டும் சான்றுகளாக வழங்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.8 ஆய்வுச் சான்றாதாரங்கள்

### 1.8.1 முதன்மைச் சான்றாதாரங்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆய்வின் முதன்மைச் சான்றாதரமாக முனைவர் இரா. தண்டாயுதத்தின் “மலேசிய நாட்டுப்புறப் பாடல்கள்” (1998) என்ற நூலும், முத்தம்மாள் பழனிச்சாமி தொகுத்த “நாட்டுப்புறப்பாடல்களில் என் பயணம்” (2006) என்ற நூலும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. முனைவர் இரா.தண்டாயுதம் தொகுத்த தெய்வக் குறிப்புடைய 116 பாடல்களும், முத்தம்மாள் பழனிச்சாமியின் தெய்வக் குறிப்புடைய ஒரு பாடலும் ஆய்வுக்கு உரிய முக்கியத் தரவுகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன. 531 நாட்டுப்புறப் பாடல்களுள் 117 பாடல்கள் மட்டுமே ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 1.1

*ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்கள்*

| மூலம் | மொத்தம் | ஆராயப்பட்டவை |
|---|---|---|
| மலேசிய நாட்டுப்புறப்பாடல்கள் | 497 | 116 |
| நாட்டுப்புறப் பாடல்களில் என் பயணம் | 10 | 1 |

### 1.8.2 துணைமைச் சான்றாதாரங்கள்

துணைச் சான்றாதரங்களாக சிறுதெய்வங்கள், பெருந்தெய்வங்கள், இந்து மதம், இந்து ஆலயங்கள், உயிர்ப்பாற்றல் மற்றும் நாட்டுப்புறப்பாடல்கள் தொடர்பான நூல்கள், ஆய்வுகள், கட்டுரைகள் ஆகியனச் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இவை ஆய்வுப் பொருண்மையைப் பலப்படுத்தவும், ஆய்வுக்குரிய சரியானத் தரவுகளைத் தேர்ந்தெடுக்கவும் மற்றும் மேற்கோள்களாகவும் பயன்படுத்தப்பட்டன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.9 கலைச்சொல் விளக்கம்

### 1.9.1 தெய்வம்

இயற்கை வழிபாடாகத் தொடங்கியது பின்னாளில் சிறுதெய்வ மற்றும் பெருந்தெய்வ வழிபாடுகள் என்று பிரிந்தது (திருப்பதி, 2018). நாட்டுப்புறத் தெய்வங்களே சிறுதெய்வங்களாகும் (அன்புவேல், 2016). குருசண்முகாம்பாள் (2011), சமுதாயத்தில் அடித்தளத்து மக்கள் வழிபடும் தெய்வங்களைச் சிறுதெய்வங்கள் என்று வழங்குகிறார். அசோக் (2019) தெய்வ வழிபாடுகளில் சிறுதெய்வ வழிபாடே முதன்மையானதாக விளங்க வேண்டும் என்கிறார். பத்மினி (2018), கிராமத்தெய்வங்களை ஒவ்வொரு கிராமத்திற்கும் பாதுகாவலர்களாகத் திகழ்கின்றவை எனவும், மனித உருவில் மட்டுமல்லாமல் கல், கட்டை, மரம், பாறை, விலங்கு என பல்வேறு உருவில் வழிபடப்படுபவர்களாகவும் விளங்குகின்ற ஆற்றல் என்றும் கூறுகிறார். அமிர்தலிங்கம் (2017), சிறுதெய்வங்கள் எனப்படுபவை ஆணாகவோ, பெண்ணாகவோ, விலங்காகவோ அல்லது முன்னோராகவோ இருக்கலாம் என்கிறார். மேலும், அவர் அவை முற்கால மனிதர்களால் மரம், கட்டை, விலங்குகள், பாறைகள் ஆகியவற்றில் உறைகின்றவையாகவும் நம்பப்பட்டதாகவும் கூறுகிறார். இந்தச் சிறுதெய்வங்களுக்கான கோயில்கள் எவ்வித ஆகம நெறிமுறைகளுக்கு உட்படாமல் கட்டப்படும் (மாரியப்பன், 2017). இச்சிறுதெய்வ வழிபாடானது மக்களின் சிந்தனைகளையும், நம்பிக்கைகளையும், வழிபாட்டுக் கூறுகளையும், சமுதாயத்தில் நிலவும் பழமையானக் கூறுகளையும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பிரதிபலிப்பதாக அமைகிறது. இது முழுக்க பெருந்தெய்வ வழிபாட்டிலிருந்து வேறுபட்டதாகும். பெருந்தெய்வ வழிபாட்டிலிருந்து சிறுதெய்வங்களின் வழிபாடு என்பது அமைவிடம், வழிபடுவோரின் எண்ணிக்கை, அமைப்பு முறை, ஆற்றல் ஆகியவற்றில் வேறுபட்டு நிற்கின்றன (முத்தையா, 2016 & மாரியப்பன், 2017). வேத வழக்கொடுப்பட்ட கடவுள்கள் மற்றும் அக்கடவுள்களோடு தொடர்புள்ள ஏனைய முதன்மைக் கடவுள்கள் பெருந்தெய்வங்கள் எனப்படுகின்றன. இத்தெய்வங்கள் ஆகம முறையிலான பூசைகளைப் பெறுபவையாகவும், கோயில்கள் உடையவையாகவும் திகழ்கின்றன. இவற்றிற்குக் குறித்தக் காலங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இத்தெய்வங்களின் வழிபாடுகளில் பிராமணிய முறை பின்பற்றப்படுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.2 தமிழ்த் தொழிலாளர்கள்

இவ்வாய்வில் தமிழ்த் தொழிலாளர்கள் எனப்படுபவர்கள் ஆங்கிலேயக் காலனித்துவக் காலக்கட்டத்தில் மலாயாவிற்குக் கொண்டு வரப்பட்ட தென்னிந்தியர்கள் ஆவர். குறிப்பாகத் தமிழ்ப் பேசக்கூடியத் தமிழர்கள் ஆவர். இவர்களின் வாழ்வியலில் நேர்ந்த சம்பவங்களைக் குறிப்பிடும் மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்கள், இவர்களின் வாழ்வில் இருந்த தெய்வங்களையும் தொடர்ச்சியாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. இத்தெய்வங்களைக் குறிப்பிடும்பொழுது அவை சார்ந்த உயிர்ப்பாற்றலும் அதன் தாக்கங்களும் காட்டப்படுகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.3 நாட்டுப்புறப்பாடல்

நாட்டுப்புறப்பாடல்கள் பல்வேறு அங்கங்களை உடைய நாட்டுப்புறவியலில் ஓர் அங்கமாக விளங்குகின்றன. அறிஞர்கள் நாட்டுப்புறப்பாடல்களுக்கு ஆழ்ந்த பல விளக்கங்களை வழங்கியுள்ளனர். முரசு நெடுமாறன் (2007), இதைக் கவிதை வடிவில் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு வாய்மொழியாக பரவும் இலக்கிய வடிவமென்று கூறுகிறார். மேலும், இவை பாடல் வடிவில் இருக்கும் உணர்ச்சிகளின் வடிகாலாகும் (அழகப்பன், 2009; *Violetta et al., 2020*). நாட்டுப்புறப்பாடல்களை உள்ளூர் மக்களுக்கு செய்தி மற்றும் தகவல்கள் வழங்குபவை என்றும் கண்மணி (2020) குறிப்பிடுகிறார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.4 வழிபாடு

வழிபாடு எனும் சொல் “வழிபடு” எனும் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும் (முத்தையா, 2016). வழிபாடு என்பது மனிதன் இயற்கை ஆற்றலைக் கண்டு அஞ்சி அதிசயித்து அதனை வணங்கத் தொடங்கியப் போது உருவாகியிருக்க வேண்டும் என திருப்பதி (2018) பகர்கிறார். தெய்வங்களை மகிழ்வுறச் செய்ய மேற்கொள்ளப்படும் பூசைகள், செயல்பாடுகள், இறைவனோடு ஒன்றாகக் கலத்தல், அவனுக்காக மனதின் கதவுகளைத் திறந்து வைத்தல் என வழிபாடு பல்வேறு கோணங்களில் பேசப்படுகிறது (பிரகாஷ், 2019). சுருங்கக் கூறின், உயர்நிலையான

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஒரு பொருளை அகத்தால் நெருங்கவும் உணரவும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளே வழிபாடு ஆகும்.

## 1.10 தொகுப்புரை

இந்த இயல் முன்னுரை, ஆய்வுப்பின்னணி, ஆய்வுச்சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு முக்கியத்துவம், ஆய்வு எல்லை, சான்றாதரங்கள், மற்றும் கலைச்சொல் விளக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கிறது. இந்த ஆய்வு மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களில் காணப்படும் தெய்வங்களையும் அவற்றோடு சார்ந்துள்ள உயிர்ப்பாற்றலையும் ஆராய்கிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi